பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 11 2024 **TUESDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, புதுதில்லியில் இன்று தொடங்கும் முதலாவது ஆசிய பௌத்த உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.

2. இந்திய மொழிகளின் வளர்ச்சிக்காக, கடந்த பத்து ஆண்டுகளில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

3. நதிகள் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளில் நாட்டு மக்கள் அனைவரும் பங்காற்ற வேண்டும் என மத்திய ஜல்சக்தித்துறை அமைச்சர் திரு சி.ஆர். பாட்டீல் வலியுறுத்தியுள்ளார்.

4. அமெரிக்க அதிபர் தேர்தல் இன்று நடைபெறுகிறது.

5. கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் --*</u>

**<<<<<<>>>>>**

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, புதுதில்லியில் இன்று தொடங்கும் முதலாவது ஆசிய பௌத்த உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் பௌத்த தலைவர்கள் மற்றும் சர்வதேச பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

ஆசியாவை வலுப்படுத்துவதில் புத்த தம்மாவின் பங்கு என்ற கருப்பொருளில் இம்மாநாடு நடைபெறுகிறது.

மத்திய கலாச்சார அமைச்சகம் ஏற்பாடு செய்துள்ள இந்த மாநாட்டில், பௌத்த கலை, கலாச்சாரம், பாரம்பரியம், புத்தரின் போதனைகள், 21-ஆம் நூற்றாண்டின் பௌத்த இலக்கியங்களும், தத்துவங்களும் என்பன உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் விவாத அமர்வுகள் நடைபெறவுள்ளன.

<<<<<<>>>>>

இந்திய மொழிகளின் வளர்ச்சிக்காக, கடந்த பத்து ஆண்டுகளில் மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற மத்திய இந்தி குழு கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், இந்திய மொழிகளை பாதுகாக்கவும், அவற்றை ஊக்குவிக்கவும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை எடுத்துரைத்தார்.

தொடக்கக்கல்வி முதல், பொறியியல் மற்றும் மருத்துவ கல்வி வரை இந்திய மொழிகளில் கல்வி வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அண்மையில், ஐந்து மொழிகள் செம்மொழிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன என்றும், இவற்றையும் சேர்த்து 11 மொழிகள் செம்மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

நவீன பாடத்திட்டங்கள் இந்தியிலும், பிற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டியது அவசியம் என்று திரு அமித் ஷா வலியுறுத்தினார்.

இந்த கூட்டத்தில் மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா, கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான், சட்டத்துறை இணையமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெக்வால், தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<<<>>>>>

நதிகள் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளில் நாட்டு மக்கள் அனைவரும் பங்காற்ற வேண்டும் என மத்திய ஜல்சக்தித்துறை அமைச்சர் திரு சி.ஆர். பாட்டீல் வலியுறுத்தியுள்ளார்.

தூய்மை கங்கை இயக்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கங்கை உற்சவகத்தை ஹரித்துவாரில் நேற்று அவர் தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர், நாட்டில் 60 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் கங்கை நதியால் பயனடைவதாக தெரிவித்தார்.

நதிகள் நமது கலாச்சாரத்தின் பாரம்பரியத்திலும் முக்கிய பங்காற்றுவதாக அவர் குறிப்பிட்டார்.

நதிகள் பாதுகாப்புக்காகவும், நீர் சேமிப்புக்காகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு முக்கிய முன் முயற்சிகளை எடுத்துள்ளதாக திரு சீ ஆர் பாட்டீல் கூறினார்.

நிகழ்ச்சியில் பேசிய ஜல்சக்தித்துறை இணையமைச்சர் திரு ராஜ்பூஷன் சௌத்ரி, தூய்மை கங்கை இயக்கத்தின்கீழ், பீகார், உத்தராகண்ட் மாநிலங்களில் நீர் சுத்திகரிப்புப்பணிகளுக்காக 7 ஆயிரத்து 144 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

வருமான வரிச் சட்டத்தை மறுஆய்வு செய்வது குறித்து கடந்த மாதத்தில் 6 ஆயிரத்து 500 பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளதாக வருமான வரித் துறை கூறியுள்ளது.

வருமான வரிச் சட்ட மறு ஆய்வு தொடர்பாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் புதுதில்லியில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் வருவாய்த் துறைச் செயலாளர் திரு சஞ்சய் மல்ஹோத்ரா, மத்திய நேரடி வரிகள் வாரிய செயலாளர் திரு ரவி அகர்வால் மற்றும் மூத்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வருமான வரி தொடர்பான பல்வேறு அம்சங்களை மறுஆய்வு செய்ய 22 சிறப்பு துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குழுக்கள் பல்வேறு கூட்டங்களை நடத்தி, பரிந்துரைகளைப் பெற்று வருவதாக நிதியமைச்சரிடம் விளக்கப்பட்டதாக வருமான வரித்துறை கூறியுள்ளது.

<<<<<<>>>>>

தெலங்கானாவில் வேளாண் கடன் தள்ளுபடி தொடர்பாக காங்கிரஸ் கட்சி தவறான தகவல்களைத் தெரிவித்து வருவதாக தெலங்கானா மாநில பிஜேபி தலைவரும் மத்திய அமைச்சருமான திரு கிஷண் ரெட்டி கூறியுள்ளார்.

ஹைதராபாதில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மகாராஷ்டிரா மற்றும் ஜார்க்கண்ட் சட்டப் பேரவைத் தேர்தல் பிரச்சாரங்களின்போது தெலங்கானாவில் வேளாண் கடன் தள்ளுபடி செய்யப்பட்டதாக காங்கிரஸ் பிரச்சாரம் செய்து வருகிறது என்று கூறினார்.

ஆனால் இது தவறான பிரச்சாரம் என்றும், 38 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளில் சுமார் 22 லட்சம் விவசாயிகளின் கடன்கள் மட்டுமே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தெலங்கானா, ஹிமாச்சலப் பிரதேசம் மற்றும் கர்நாடகாவில் காங்கிரஸ் அளித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று திரு கிஷண் ரெட்டி குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>

இந்தியாவின் முன்னணி விளையாட்டு மையமாக ஆந்திராவை உருவாக்க அம்மாநில அரசு புதிய விளையாட்டுக் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தப் புதிய விளையாட்டுக் கொள்கைக்கு முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு ஒப்புதல் அளித்துள்ளார்.

திறன் மேம்பாடு, வலுவான விளையாட்டுச் சூழல், உலகளாவிய தரத்தில் தேர்வு, விளையாட்டு வீரர்களுக்கான வேலை பாதுகாப்பு ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டதாக இந்த கொள்கை அமைந்துள்ளது என மாநில அரசு கூறியுள்ளது.

புதிய கொள்கையின் கீழ், அரசுப் பணிகளில் விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீடு 2 சதவீதத்தில் இருந்து 3 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

விளையாட்டு உள்கட்டமைப்பை மேம்படுத்த, அமராவதி, திருப்பதி மற்றும் விசாகப்பட்டினத்தில் புதிய விளையாட்டு வளாகங்களும், விஜயவாடா மற்றும் கடப்பாவில் விளையாட்டு பள்ளிகளும், விஜயநகரத்தில் பழங்குடியின விளையாட்டு வீரர்களுக்கு சிறப்பு வசதியும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

<<<<<<>>>>>

ஜம்மு-காஷ்மீர் சட்டப்பேரவைத் தலைவராக தேசிய மாநாட்டுக் கட்சியின் திரு அப்துல் ரஹீம் ராத்தர் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேச சட்டப் பேரவையின் முதல் கூட்டத்தொடர் ஸ்ரீநகரில் நேற்று தொடங்கியது.

5 நாட்கள் நடைபெறும் இந்தக் கூட்டத் தொடரில் அவைத் தலைவர் தேர்வுக்குப் பின், துணை நிலை ஆளுநர் திரு மனோஜ் சின்ஹா உரையாற்றினார்.

ஜம்மு-காஷ்மீர் அரசு, மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற உறுதிபூண்டுள்ளது என்று அவர் கூறினார்.

மக்கள் இப்போது புதிய அரசை மிகுந்த நம்பிக்கையுடன் எதிர்நோக்கி இருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து வழங்குவது குறித்து பலமுறை பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி இருப்பதாகவும் உரிய நேரத்தில் அது தொடர்பான முடிவு மேற்கொள்ளப்படும் என்றும் திரு மனோஜ் சின்ஹா கூறினார்.

**<<<<<<>>>>>**

மிசோரமில், சின்லுங் மலைப் பகுதி கவுன்சிலின் 12 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்குப்பதிவு இன்று நடைபெறுகிறது.

இந்த தேர்தலில் 11 ஆயிரத்து 914 பெண் வாக்காளர்கள் உட்பட மொத்தம் 23 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

19 வாக்குச்சாவடிகளில் காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

ஆறு வாக்குச்சாவடிகள் பதற்றம் நிறைந்தவையாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் மிசோரம் மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திரு **Laldingliana** எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>**

லண்டனில் இன்று தொடங்கும் உலக பயணச் சந்தை நிகழ்வில் மத்திய சுற்றுலா அமைச்சகம் பங்கேற்கிறது.

7-ம் தேதி வரை மூன்று நாட்கள் நடைபெறும் இந்தப் பயணச் சந்தையில், இந்தியாவின் கலாச்சார மற்றும் மொழி பன்முகத்தன்மையை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு அம்சங்கள் இடம்பெறும் என மத்திய சுற்றுலா அமைச்சகம் கூறியுள்ளது.

விமான நிறுவனங்கள், இந்திய பயணத் துறையைச் சேர்ந்த ஹோட்டல் உரிமையாளர்கள், கோவா, ஒடிசா, கேரளா, தமிழ்நாடு, தெலங்கானா, கர்நாடகா, ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களின் சுற்றுலாத் துறைகள் உட்பட 50-க்கும் மேற்பட்ட அமைப்புகளும் நிறுவனங்களும் இதில் பங்கேற்கவுள்ளதாக மத்திய சுற்றுலா அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

அமெரிக்க அதிபர் தேர்தல் இன்று நடைபெறுகிறது.

அதிபர் வேட்பாளர்களாக முன்னாள் அதிபர் திரு டொனால்டு ட்ரம்பும், தற்போதைய துணை அதிபர் திருமதி கமலா ஹாரிஸும் பங்கேற்கின்றனர்.

இந்திய நேரப்படி, இன்று மாலை மணி 5.30 முதல், நாளை காலை மணி 9.30 வரை வாக்குப்பதிவு நடைபெறும்.

வாக்குப்பதிவு நிறைவடைந்த பின்னர், வாக்குகள் எண்ணப்பட்டு ஓரிரு நாட்களுக்குள் முழு முடிவு தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்கூட்டியே வாக்களிக்கும் வசதியை பயன்படுத்தி சுமார் 7 கோடி பேர் வாக்குகளை பதிவு செய்துள்ளனர்.

<<<<<<>>>>>>

இலங்கையில் பொதுத் தேர்தலையொட்டி தபால் வாக்கு செலுத்தும் நடைமுறை நேற்று நடைபெற்றது.

தேர்தல் பணியில் ஈடுபடும் அரசு ஊழியர்களும் ராணுவத்தினரும் தங்களது வாக்குகளைப் பதிவு செய்தனர்.

அந்நாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரை தேர்வு செய்வதற்கான தேர்தல் வரும் 14 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதில் தபால் வாக்கு செலுத்த 7 லட்சத்து 38 ஆயிரம் அரசு ஊழியர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

நேற்று வாக்களிக்க இயலாதவர்கள், வரும் 7 மற்றும் 8-ம் தேதிகளில் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டுத் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

முன்னதாக இலங்கையில் கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்ற அதிபர் தேர்தலில் தேசிய மக்கள் கட்சியின் வேட்பாளர் திரு அனுரகுமார திஸாநாயக்க வெற்றி பெற்று அதிபராகப் பொறுப்பேற்றார்.

<<<<<<>>>>>

கொரிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

தென்கொரியாவின் இஸ்கானில் நடைபெறும் இப்போட்டியில், இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி, கிரண் ஜார்ஜ் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

----------------

தேசிய சீனியர் ஆடவர் ஹாக்கி சாம்பியன் ஷிப் போட்டியில் தமிழ்நாடு அணி தனது முதல் ஆட்டத்தில் 7-0 என்ற கோல் கணக்கில் ஆந்திர அணியை வென்றது.

சென்னையில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் நேற்று நடைபெற்ற இதர ஆட்டங்களில் உத்தரப்பிரதேசம், கர்நாடகா, சண்டிகர், மணிப்பூர், மத்தியப்பிரதேச அணிகள் வெற்றிபெற்றன.

<<<<<<END>>>>>